பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை (05.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 09

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகள் வழமைபோல் தொடரும்

### அரசியல் நடவடிக்கைகளால் மாற்றம் இருக்காது

கொழும்பு,டிசெ.5

அரசியல் நடவடிக்கைகளால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகளில் மாற்றம் எதையும் செய்துவிட முடியாது. தற்போது நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையில் மாற்றம் எதுவும் செய்யப்படாதவரை குழுவின் வழமையான பணிகள் தொடரும்.

இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் குறித்துச்சில முக்கிய முடிவுகளை நாளை புதன்கிழமை அரசு எடுக்கவுள்ளதால் நோர்வேயின் சமாதானத் தூதுவரை கிளிநொச்சிக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தி உள்ளது.

அதேபோன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அரசிடம் இருந்து ஏதாவது அறிவுறுத்தல் கிடைத்ததா என்று கேட்டபோதே கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரி.ஓமர்சன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்போது நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் எமது வழமையான போர்நிறுத்தப் பணிகள் தொடரும். (06ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் அமைப்புத் தொடர்பாக ஓரிரு நாள்களில் முக்கிய முடிவு

## தடை அல்லது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசு ஆராய்கின்றது என்கிறார் ரம்புக்வெல

கொழும்பு,டிசெம்பர்5

விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பாகவும், நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கு எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பிலும் அரசு எடுக்கவிருக்கும் முக்கிய தீர்மானங்கள் பெரும்பாலும் ஓரிரு தினங்களில் வெளியிடப்படும்.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்தல் அல்லது அதன் மீது கட்டுப்பாடுகளை விதித்தல் என்ற அடிப்படையில் அரசின் தீர்மானங்கள் அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசின் முக்கிய முடிவு இன்று அல்லது நாளை வெளியிடப்படலாம் என்பதை உறுதிப்படுத்தியிருக்கும் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல, 'பயங்கரவாதத்தை முறியடிப்பதற்காக புலிகள் மீது தடை விதிப்பது உட்பட சாத்தியமான சகல வழிமுறைகளையும் அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது' என்றும் தெரிவித்திருக்கிறார்.

''வன்செயல்களும், பயங்கரவாத நடவடிக்கைளும் அதிகரித்திருப்பதால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குச் சில தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டி இருக்கிறது.

''2001 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்டிருந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

''அரசு, புலிகளுடன் பல வருடங்களாகப் பேச்சு நடத்தி வந்துள்ளது. இருந்தும் புலிகள் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் எதுவித அக்கறையும் செலுத்தாமல், தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதிலிருந்து இனப்பிரச்சினைத் தீர்வில் புலிகளுக்கு அக்கறையில்லை என்பது தெளிவாகின்றது. எனவே, பொறுப்பு (06ஆம் பக்கம் பார்க்க)

## வாகரை நோக்கி படைநகர்வு

மட்டக்களப்பு, டிச. 05

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாகரைப் பகுதியை நோக்கி இராணுவத்தினர் நேற்றுக் காலை டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் முன்னேற்ற முயற்சி ஒன்றை மேற்கொண்டனர் என்றும் - இந்த நகர்வை இடைமறித்து விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்தியதையடுத்து அங்கு இரு தரப்பினருக்கும் இடையே மோதல் வெடித்தது என்றும் - அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

திருகோணமடு, காதக்குளம் பகுதிகளில் இருந்து படையினர் இந்த நகர்வை மேற்கொண்டனர் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரின் முகாம்களிலிருந்து சரமாரியான ஆட்லறி ஷெல் வீச்சுகளும் இடம்பெற்றன. இந்த மோதலில் இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (த)

## புலிகளைத் தடை செய்வதில் அவசர முடிவு வேண்டாம்!

### ஜனாதிபதியிடம் கோருவார் ரணில்



கொழும்பு,டிசெ5

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீது மீண்டும் தடை கொண்டுவருவதில் அவசரம் காட்ட வேண்டாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இன்று சந்திக்கும்போது ரணில் விக்கிரமசிங்க அவரிடம் கோருவார்.

இவ்வாறு ஐ.தே.கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டன. இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர், இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச இருக்கிறார்.

அலரி மாளிகையில் இன்று காலை 10 மணிக்கு இச்சந்திப்பு நடைபெறுமென ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

புலிகளைத் தடைசெய்ய வேண்டுமென ஜே.வி.பி., (06ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தடைசெய்யும் முடிவை அரசு தீர்க்கமாக ஆராய வேண்டும்

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கருத்து



கொழும்பு,டிச.5

தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்வது குறித்த முடிவுகளை எடுப்பதற்கு முன்பு இவை சம்பந்தமாக மேலும் தீர்க்கமாக ஆலோசிக்க வேண்டும். அரசை ஆத்திரமூட்டச் செய்யும் சம்பவங்கள் நடைபெற்றபோதிலும் அரசு அதிகூடிய பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது இன்றைய நிலையில் அவசியமானது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள நோர்வே விசேட சமாதான தூதுவர் ஜோன் ஹன்சன் போவர், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கார் மற்றும் பிரதிநிதிகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை நேற்று அவரது இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இப் பேச்சுக்களை தொடர்ந்து ஊடகங்களுக்கு விவரங்களை வெளியிட்டபோதே ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமுடன் (06ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் இந்தியத் தலையீடுதான் சமாதானத்தைக் கொண்டுவர முடியும்!

### 'வாழும் கலை' நிறுவுநர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் தெரிவிப்பு



கோயம்புத்தூர்,டிசெ.5

''புரையோடிப் போயிருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு அவசியம். அப்பொழுதுதான் அந்த நாட்டில் தீர்வையும், சமாதானத்தையும் கொண்டுவர முடியும்'' என்று 'வாழும் கலை' நிறுவனத்தின் ஸ்தாபகரான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர், இந்தியாவுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

'ஆத்மானந்த உற்சவம் - 2006' என்ற வைபவம் கடந்த ஞாயிறு இரவு பொள்ளாச்சியில் நடந்தது. இங்கு சமுகமளித்திருந்த அடியார்கள் மத்தியில் ஆன்மீகத் தந்தையான ரவிசங்கர் உரையாற்றினார்.

அவர் கூறியதாவது:-

''இலங்கை மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து வருகிறார்கள். [illegible] துவ வசதி, போக்குவரத்து வசதி எதுவும் இல்லாமல் அவர்கள் அவலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் துயரங்களுக்கு எல்லாம் முடிவு கட்டுவதற்கு இந்தியா உடனடியாகத் தலையிட்டு, ([illegible] பக்கம் பார்க்க)

## பீஜித்தீவின் அதிகாரத்தை ராணுவம் கைப்பற்றியது

பீஜி,டிசெ.5

பசுபிக் சமுத்திரத்தில் உள்ள நாடான பீஜித் தீவின் ஆட்சி அதிகாரத்தை அந்த நாட்டு இராணுவம் நேற்று கைப்பற்றியது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் வீதிகளில் தடைகளை ஏற்படுத்தியுள்ள இராணுவத்தினர் அதிகாரபூர்வமாக ஆயுதங்களை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டிருந்த அரச மெய்ப்பாது காவலர்கள் மற்றும் பொலிஸாரிடமிருந்து அவற்றைக் களைந்துள்ளனர்.

6 ஆண்டுகளுக்கு முன்னர் அரசைக் கவிழ்த்த தேசியவாதிகளுக்கு பொது மன்னிப்பு (06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## சிவப்பிரகாசம் மயில்வாகனம்

[ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்]

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் மயில்வாகனம் நேற்றுமுன்தினம் (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பேரின்பசிவத்தின் தந்தையும் சோமுவின் சகோதரனும் அன்னலிங்கத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2006) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு.

தகவல்:
க.அன்னலிங்கம் (மைத்துனர்).

## பொன்னுச்சாமி பாலவடிவேல்

[ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி, சட்ட உசாவுநர், சட்டப் பிரிவு, வடக்கு கிழக்கு மாகாணம்]



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி பாலவடிவேல் நேற்று (04.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமி தண்டையல் - புண்ணியவதி தம்பதியரின் மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மயில்வாகன சுந்தரம் (மலாயன் பென்சனியர்) - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கந்தசாமி (பணிப்பாளர், விவசாய அமைச்சு, கொழும்பு), காலஞ்சென்ற புஸ்பவதி, காலஞ்சென்ற கனகராஜா (கிராம சேவையாளர்), அன்னரத்தினம் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் ரஞ்சினி (பணிப்பாளர், சமூக நலத்துறை திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை), ஜெயக்குமார் (உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர், பிரதி சுகாதார சேவைகள் பணிமனை, திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் S.N.R.பிள்ளை (பிரதி ஆசிரியர், தினகரன்), சியாமளா ஆகியோரின் அன்பு மாமனும் ஜெயசாயி, கௌதமன், ருக்சாங்கன், சாயிகாத்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ராஜேஸ்வரி (மலேசியா), ஜெயலட்சுமி (லண்டன்), நவரத்தினம், திருநாவுக்கரசு, வடிவாம்பிகை, சந்திரா, கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் கந்தசாமி (மலேசியா), தணிகாசலம் (லண்டன்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2006) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு இல. 1166, பாலையூற்று இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1166, பாலையூற்று,
திருகோணமலை.
தொ.பே. 026 222 2209

(55998)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி அருளானந்தம் ஞானேஸ்வரி



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் ஞானேஸ்வரி நேற்று (04.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அப்பாத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் ஜெயலட்சுமி, மகேந்திரராஜா (இணுவில் மத்திய கல்லூரி), தனலட்சுமி, அன்னலட்சுமி (ஆசிரியர், பண்டாரவளை த.ம.வி.) தவராஜா (கனடா), தயாநிதி (கனடா), கலாநிதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் கதிர்காமசோதி (இலங்கை மன்றக் கல்லூரி), செல்வலட்சுமி, மோகனகுமார், வில்வா (உப அதிபர், பண்டாரவளை த.ம.வி), கீதாஞ்சலி (கனடா), சிவலோகநாதன் (கனடா), பாலமுரளிதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சிவபாதம், மகேஸ்வரி மற்றும் சண்முகநாதன், மகாதேவன் (கனடா), பரமேஸ்வரி, சுந்தரேஸ்வரி, ஞானேஸ்வரன், திருச்செல்வம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.12.2006) புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அக்கா அகம்',
இணுவில் மேற்கு, இணுவில்.

(55995)

தகவல்:
குடும்பத்தினர்.

## துரையப்பா புஸ்பராஜா



கொக்குவில் மேற்கைச் சேர்ந்த துரையப்பா புஸ்பராஜா நேற்று (04.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பராணி, புஸ்பரத்தினம், கனகராஜா ஆகியோரின் சகோதரனும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் அகஸ்தியன் (ஜேர்மனி), வினோ, பிரதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகராஜின் (நோர்வே) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2006) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு.

(55992)

தகவல்:
குடும்பத்தினர்.

## நல்லதம்பி மாரிமுத்து



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி மாரிமுத்து 03.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்புமனைவியும் தேவமலர் (தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர், யாழ்ப்பாணம்), தேவராஜா (லெபனான்), செல்வராணி, அன்ரனி தேவபாலன் (யு.என்.எச்.சி.ஆர், மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயும் அருளானந்தம், திருச்செல்வநாயகம், பத்மாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.12.2006) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு நவாலி தேவர்கட்டு திரு இருதயநாதர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு ஆராதனையின் பின்னர் ஆரியம்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி.

(55991)

தகவல்:
N.A.தேவபாலன் (மகன்)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தெய்வானைப்பிள்ளை கந்தையா (அன்னம்மா)



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது 129/38 ஜம்பட்டா வீதி, கொழும்பு 13 வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வானைப்பிள்ளை நேற்று(04.12.2006) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - நாகமுத்து தம்பதியரின் புதல்வியும் காலஞ் சென்ற கந்தையாவின் மனைவியும் புஸ்பவல்லி, மோனகபுஸ்பம், மனோகரன் ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற நடராசா முருகேசு, தங்கமுத்து அழகரட்ணம் ஆகியோரின் சபாரட்ணம், வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சொக்கநாதன், பெருமாள்பிள்ளை, பரமேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், கேதீஸ்வரன், பிரபாகரன், சுதர்மதி, சுதாகரன், புவனேஸ்வரன், தாட்சாயினி, புவிதரன், கிரியாயினி, தனஞ்செயன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.12.2006) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 8 மணிவரை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 06.12.2006 புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணிக்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

129/38, ஜம்பட்டா வீதி,
கொழும்பு - 13
தொ.பே. 0112396227

தகவல்:
ந.பெருமாள்பிள்ளை
(மருமகன்).

## திருமதி லீலாவதி இராமலிங்கம்

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி லீலாவதி இராமலிங்கம் 02.12.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் (உதவி வைத்திய அதிகாரி) அன்பு மனைவியும் இராஜேஸ்வரி, ஞானேஸ்வரி, பாஸ்கரன் (Oxfam GB Colombo) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற Dr.ஸ்ரீராஜேஸ்வரன் (J.M.O), நாகேந்திரன் (Accountan) மேனகா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற நடராஜா, சிவகாமசுந்தரி, தேவசுந்தரி, கமலாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயசுதன் (லண்டன்), சுபோதினி (மருத்துவபீடம்), ரிசிகேசன், தாரகி, தாரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.12.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

80, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.
தொ.பே. 021 222 8281

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி யோகம்மா மகாலிங்கம்

கோணாந்தோட்டம், வல்வெட்டி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோகம்மா மகாலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), நேற்று (04.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி வேலுப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற மகாலிங்கத்தின் அன்பு மனைவியும் கலாவதியின் (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) அன்புத் தாயும் சபாநாதனின் (இந்தியா) சிறிய தாயும் துரைசிங்கத்தின் (அதிபர், யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை), அன்பு மாமியும் நிதர்ஜா, ஜீவிதா, குருபரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பிமா,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(55990)

தகவல்:
வே.துரைசிங்கம்
(மருமகன்)

## திருமதி கௌசலாதேவி சின்னத்தம்பி

சாவகச்சேரி, கல்வயலைச் சேர்ந்த திருமதி கௌசலாதேவி சின்னத்தம்பி நேற்றுமுன்தினம் (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் காலமானர்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் வே. சின்னத்தம்பி(ஆறுமுகம்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி சகுந்தலா பரமநாதன் (ஆசிரியை, தி/கிண்ணியா மகா வித்தியாலயம்), தயாபரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.12.2006) திங்கட்கிழமை திருகோணமலையில் நடைபெற்றன.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி.சகுந்தலாதேவி பரமநாதன்

கல்வயல்,
சாவகச்சேரி.

# மரண அறிவித்தல்கள்

## இராமநாதன் அருணாசலம் (சோதி)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் சரசாலையை வதிவிடமாகவும் தற்பொழுது நந்தாவில்லேன், கொக்குவில் கிழக்கில் வசித்தவருமான இராமநாதன் அருணாசலம் நேற்று (04.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் தம்பிஐயா (மலேசியா), மகேஸ்வரி (மலேசியா), செல்வராணி (கொழும்பு), பரமேஸ்வரி(மல்லாகம்), சிதம்பரநாதன் (புத்தூர்), ஞானேஸ்வரி (லண்டன்), புவனேஸ்வரி (கொழும்பு), புஸ்பராணி (கொழும்பு), இரங்கநாதன் (மல்லாகம்), சிவலிங்கநாதன் (வவுனியா), பவளராணி ஆகியோரின் சகோதரரும் மஞ்சுளாவின் தந்தையும் த.சரஸ்வதி, திருநாவுக்கரசு, தட்சணாமூர்த்தி, சி.இராசம்மா, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் இரத்தினசிங்கம், குமாரசாமி, இ.சரஸ்வதி, சி.மல்லிகாதேவி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.12.2006) செவ்வாய் திழமை முற்பகல் 10 மணியளவில் மல்லாகத்தில் நடைபெற்று மல்லாகம், இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்களா லேன்,
மல்லாகம்.

தகவல்:
அ.இரங்கநாதன்

## நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி (காண்டீபன்-சுன்னாகம்)



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 283/13, புகையிரத வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தட்சணாமூர்த்தி நேற்று (04.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சிவசாமி - நல்லபிள்ளை தம்பதியரின் மருமகனும் தவரஞ்சிதமலரின் அன்புக் கணவரும் மோகனராஜி, சபேசன், கஜன், தர்சிகா, டிலக்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரி (பிரான்ஸ்), நாகராசா-(கனடா), புனிதவதி (கனடா), மங்களேஸ்வரி (சுவிஸ்), மனோகரன் (பிரான்ஸ்), ரதீஸ்வரி (கனடா), காலஞ்சென்ற மனோரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரவணமுத்து (பிரான்ஸ்), வரலெட்சுமி (கனடா), துரைராசா (கனடா), திருநாவுக்கரசு (கண்டி), வசந்தகுமாரி (பிரான்ஸ்), ஜீவரட்ணம் (கனடா), மங்கையற்கரசி (சுவிஸ்), சுசீலாதேவி, ஏகாம்பரநாதன் (சுவிஸ்), உலோகநாதன், நகுலேந்திரநாதன், சந்திரநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2006) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(55994)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## சொர்ணரத்தினம் பொன்னம்பலம்



நீர்வேலி தெற்கைச் சேர்ந்தவரும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான திருமதி சொர்ணரத்தினம் பொன்னலம்பலம் 02.12.206 சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற வர்த்தகர் செல்லையா பொன்னம்பலத்தின் (முன்னாள் உரிமையாளர், ஸ்ரீ குமரன் ஸ்ரோர் நாவலப்பிட்டி) அன்பு மனைவியும் சோதிலிங்கம்(கொழும்பு), உமா தேவி (ஆசிரியை,கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), சொர்ணதேவி(லண்டன்), சீதாதேவி(பிரான்ஸ்) சண்முகலிங்கம்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் நர்மதா, ஸ்ரீஸ்கந்தராஜா (மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி, கொழும்பு), சிவானந்தன்,, தயாபரன்,வனஜா ஆகியோரின் அன்பு மாமியும், சுதன், அபராஜிதன், சுதேஷணா, சுகோதயன்,அருணோதயன், பைரவி, அபிராம், புருஷோத்மன், வானதி, அர்ஜின், அபித்திரா, அச்சுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 46/1, ரெம்பிளேஸ் வீதி, கல்கிசையிலுள்ள இல்லத்தில் நேற்று (04.12.20006) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

46/1, ரெம்பிளேஸ் எவீதி,
கல்கிசை.

(சி/51450)

தகவல்:
சோதிலிங்கம்
(மகன்)

## ஆறுமுகம் கந்தசாமி

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தசாமி நேற்றுமுன்தினம் (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற கந்தையா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நடராசா, மகேஸ்வரி மற்றும் முத்துச்சாமி, பவளம்,தவமணி ஆகியோரின் சகோதரனும் செல்வரட்ணம் (இளைப்பாறிய கொழும்பு மாநகர சபை பொறியியலாளர்),கமலா தேவி (இளைப்பாறிய கணக்காய்வாளர் நல்லூர் ப.நோ.கூ. சங்கம்), ஜெயராஜ் (இளைப்பாறிய வெளிக்கள உத்தியோகத்தர் தலவாக்கலை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (05.12.2006) செவ்வாய்கிழமை நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில்' கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(55993)

தகவல்:
மனைவி, குடும்பத்தினர்.

## மார்க்கண்டு அரியரத்தினம் (சித்தப்பா)

[உரிமையாளர், சிற்றிவைன் ஸ்ரோர்ஸ், றோயல் வைன் ஸ்ரோர்ஸ், கிருத்திகா ஜுவலர்ஸ், சண் ரான்ஸ்போட்]



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு அரிய ரத்தினம் நேற்றுமுன்தினம் (3.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(55983)

399, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ.9பாதையைத் தற்காலிகமாகவேனும் திறந்து தமிழருக்கு உதவ வேண்டும்

## பிரதி அமைச்சர் டிலான் பெரேராவின் ஆதங்கம் இது

கொழும்பு,டிசெ.5

வட பகுதி மக்களுக்கான உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதற்காகத் தற்காலிகமாகவேனும் ஏ-9 பாதையைத் திறப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டு மென்று பிரதியமைச்சர் டிலான் பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய புதிய நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற தலைப்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கோரியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கலை மேற்கொண்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் தமிழ் மக்கள் தமது பிரதிநிதியைத் தாமே தேர்ந்தெடுக்கும் நிலை உருவாக்கப்படவும் வேண்டும்.

வட பகுதியை இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் இணைக்கும் ஏ-9 பாதையே அங்குள்ள மக்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்புவதற்கான ஒரே வழியாகும்.

மக்கள் பட்டினியால் வாடுவதாகப் பிரசாரம் செய்யும் புலிகள் ஏ-9 பாதையைத் திறக்கத் தடைபோடுகின்றனர். பேச்சு வார்த்தைகளைப் பகிஷ்கரிப்புச் செய்வதற்காகவே புலிகள் இந் நடவடிக்கையை மேற்கொள்கின்றனர். எனவே, புலிகளுக்கு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்காது ஏ-9 பாதையை தற்காலிகமாகவேனும் திறக்க அரசு முன்வர வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் ஒரு போதும் இணங்கப்போவதில்லை.

புலிகள் நாட்டைப் பிளவுபடுத்து வதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றனர். நாம் அதிகளவு சமாதானம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

### விளக்கீடு சோபை இழந்தது

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற கார்த்திகை விளக்கீடு மிகவும் எளியமுறையில் கொண்டாடப்பட்டது.

ஆலயங்களில் சொக்கப்பானை எரிக்கும் நிகழ்வுகள் காலை வேளையில் இடம்பெற்றுள்ளன. இதேபோன்று வீடுகளின் முன்னர் தீப அலங்காரங்கள் இடம்பெறவில்லை. யாழ். குடாநாட்டில் தற்போது நிலவிவரும் தேங்காயெண்ணெ, நல்லெண்ணை போன்றவற்றுக்கான பெரும் தட்டுப்பாடே இதற்குக் காரணம்.

அத்துடன் நாட்டில் மாலை ஆறுமணியுடன் ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதும் விளக்கீடு சோபை இழந்தமைக்குக் காரணம் எனலாம்.

### முத்திரை தட்டுப்பாடு

வலி.தென்மேற்கு,டிசெ.5

வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உபதபால் அலுவலகங்களில் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் கடைகளிலும் இந்த முத்திரைகளை அதிகவிலை கொடுத்து பெறமுடியாதிருப்பதாகவும் கூறப்படுகிறது.

குறிப்பாக மானிப்பாய், பண்டத்தரிப்பு ஆகிய தபால் அலுவலகங்களில் முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாகக் கூறப்படுகின்றது. (202-135)

# மஹிந்தவுடன் படம் எடுப்பதை தவிர்த்தார் மன்மோகன் சிங்!

கொழும்பு, டிசெ.5

மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் புதுடில்லி, சென்றிருந்தபோது இந்தியப் பிரதமருடன் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பான புகைப்படங்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

இலங்கை ஜனாதிபதியுடன் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பின்போது ஒளிப் படங்களோ, புகைப்படங்களோ எடுக்கவேண்டாம் என்று பிரதமர் மன்மோகன் சிங், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார் என்று தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

ஸ்ரீலங்காவின் போக்கிலும், அதன் தற்போதைய நிலைமையிலும் இந்தியா அதிருப்தி கொண்டுள்ளதையே இது காட்டுவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் குறித்து இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டு மெனத் தமிழக முதல்வர் மு.கருணாநிதி மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்.

இரு தலைவர்களினது சந்திப்பின் போது சம்பிரதாயபூர்வமான படங்களை எடுக்க அனுமதிக்காமை தமிழ் நாட்டின் கோரிக்கையை மத்திய அரசு கவனத்தில் கொண்டுள்ளது என்பதற்கு அத்தாட்சி என்று கூறப்படுகிறது. வழமையாக இரு தலைவர் களது சந்திப்பின்போது வெளியிடப்படும் கூட்டறிக்கையும் இந்தச் சந்திப்பில் வெளியிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புலிகளுக்கு உளவுத் தகவல்களை விற்ற ராணுவ மேஜரின் சகோதரர் தற்கொலை!

கொழும்பு, டிசெ.5

விடுதலைப் புலிகளுக்கு முக்கிய இராணுவத் தகவல்களை விற்றுப் பெருந்தொகைப் பணம் பெற்றதாக விசாரணக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் இராணுவ மேஜரின் சகோதரர் தற்கொலை செய்துள்ளார்.

சகோதரர் தனக்குத் தந்த பணம், விடுதலைப் புலிகளிடமிருந்து கிடைத்தது என்பதை அறிந்ததாலேயே 45 வயதான டி. எம். தர்மதிலக என்ற பாடசாலை ஆசிரியர் தற்கொலை செய்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இவர் தமது குடும்பத்துடன் பிலியந்தல என்ற இடத்துக்கு விடுமுறைக்குச் சென்றிருக்கிறார். அங்கு பொல்கொட வாவியில் படகுப் பயணம் சென்றபோது திடீரெனத் தண்ணீரில் குதித்துத் தற்கொலை செய்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

குற்றப் புலனாய்வுத் துறையினரது விசா ரணைக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தனது சகோதரரை தர்மதிலக சந்தித்துள்ளார். அப்போது தனக்குக் கடனாகத் தந்த பணம் விடுதலைப் புலிகளிடமிருந்து பெற்றது என்பதை அறிந்துள்ளார்.

இராணுவ மேஜர் தனது மற்றொரு சகோதரருக்கும் லொறி ஒன்றை வாங்க 5 லட்சம் ரூபா கடன் கொடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்குத் தகவல் கொடுத்து, அதற்குப் பதிலாகத் தான் பணம் பெற்றதை விசாரணைகளில் மேஜர் ஒப்புக்கொண்டுள்ளார் என அறியப்படுகிறது.

குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட மூன் றாம் நிலை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பாரமி குல துங்கவின் நடவடிக்கைகள் உட்படப் பல தகவல்களை அவர் விடுதலைப் புலிகளுக்கு விற்றுள்ளரர் என அறியப்படுகிறது. (ஐ)

## வாசகர் திருமுகம்

### வலி.மேற்கில் மின்சார விநியோகம் சீரில்லை

தேவைப்படும் நேரத்தில் மின்சாரம் இல்லாமையால் வலி. மேற்குப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர். மின்சார சபையினர் பத்திரிகை மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் மின்சார விநியோக நேர அட்டவனைப்படி இப்பகுதியில் மட்டும் மின்சாரம் ஏன் வழங்கப்படுவதில்லை என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பாடசாலையைவிட்டு, 3.30 மணிபோல் வீட்டிற்கு வந்து, சிறிது நேரம ஓய்வெடுத்தபின் மாலை 6மணிக்கு கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாமலுள்ளனர். இதேபோல் கணவனமனைவி அரச உத்தியோகத்தராக இருக்கும் பட்சத்தில் வேலை முடிந்து வீட்டிற்கு வந்து ஓய்வெடுத்தபின்தமது இரவு நேர சாப்பாட்டிற்கான ஆயத்தங்களைச் செய்ய முடியாத நிலை. (இங்கு சமையலுக்கு மின்சாரம் தேவை என்பது முக்கியமல்ல - குறிப்பிட்ட காலப் பகுதியான மாலை 6.30 மணிமுதல் இரவு 7.30 மணிவரை வேறு பகுதிகளுக்கு வழங்கப்படும் மின்சார விநியோகம் ஏன் இங்கு வலி.மேற்கில் மட்டும் கிடைப்பதில்லை என்பதே முக்கியம்) இப்படி பலரும் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இரவு 12 மணிவரை தரப்படும் மின் விநியோகத்தை இரவு 10.30 மணிவரை வழங்கி இந்நேர ஒதுக்கத்தை மாலை 6 மணிமுதல் 7.30 மணிவரை வழங்க நடவடிக்கை எடுக்க முடியாதா?

குறிப்பிட்ட நேரத்தில் வழங்கப்படும் மின் விநியோகம் கூட, பராமரிப்பு வேலையென காரணம் காட்டி தொடர்ந்து பல மணித்தியாலங்களுக்கு தடை செய்யப்படுகிறது.

இவற்றை யார் சீர் செய்வது? சம்பந்தப்பட்ட மின்சார சபையினர் இதனைக் கவனத்தில் எடுப்பார்களா?

சங்கானை, நலன்விரும்பி.

# இலங்கைக்கு வருவதை தவிர்த்தார் பில் கிளின்டன்

ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதுவரும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியுமான பில் கிளின்டன், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நாடுகளின் அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிடும் தனது பயணத் திட்டத்தில் இலங்கையைத் தவிர்த்துள்ளார்.

இலங்கையில் தற்போது நிலவும் நிலைவரங்கள் அவருக்கு ஏற்படுத்திய கவலையும் அதிருப்தியுமே இதற்குக் காரணம் என அறியப்படுகின்றது.

கிளின்டனின் சிறப்புத் தூதுவர் பதவிக் காலம் இந்த மாதம் டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதற்கு முன்னதாக இந்தியா, இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு அவர் சுற்றுப்பயணம் செய்தார்.

இலங்கையில் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுவதாக ஸ்ரீலங்கா அரசுமீது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதாலும் கிளின்ரன் தமது பயணக் கூட்டத்தில் இலங்கையைத் தவிர்த்துவிட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீரமைப்புப் பணிகளோ துயர் நிவாரணப் பணிகளோ எதுவும் சீராக நடைபெறாத நாட்டுக்குப் பயணம் செய்வதில் அர்த்தமில்லை என அவர் இலங்கையைத் தவிர்த்துவிட்டார் என்று கூறப்படுகிறது. (ஐ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 09 . 07 . 1940



மறைவு 05 . 11 . 2006

### பீதாம்பரம் கெங்காதேவி

05.11.2006 அன்று சிவபதமடைந்த எமது தாய் பீதாம்பரம் - கெங்காதேவி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி, தந்தி மற்றும் அஞ்சலி பிரசுரம் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு பல வழி களிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் 05.12.2006 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (பெரியவளவு, புலோலி வடக்கு, பருத்தித்துறை) இடம்பெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள் கின்றோம்.

தகவல்:
Dr.P.ஜீபரா (மகன்)
போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு.

(55972)

## 10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

வளர்மதிக்காய் 25 . 10 . 1936



வான்மதிக்காய் 05 . 12 . 1996

### அமரர் பொன். நாகமணி

(மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகரும் சமூக சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்தவரும் சங்கீத விற்பன்னரும்)

பூவுலகில் உன் சேவை போதும் புண்ணியனே
என்று வஞ்சகமாய் வானுலகோர் வலிந்து
இழுத்தனரோ? இன்னும் உன் சேவை
இங்கே தான் தேவை இறங்கி வாராயோ?

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (சி-51453) வளர்மதி சனசமூக நிலையமும் அதன் உப அமைப்புகளும்.

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த MBBS டொக்டர் மணமகனுக்கு உயர் கல்வித் தராதரமுடைய மணப்பெண் வேண்டும். சீதனம் முக்கியமில்லை. பெண் மெலிந்த தோற்றமும் அழகுடையவராகவும் வயது 28 இற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். டொக்டரின் வயது 35, உயரம் 5'5'' நட்சத்திரம் மூலம் கிரகபாவம் 40 செவ்வாய்தோஷமில்லை. தொடர்பு:எஸ்.ஏ.தர்மலிங்கம், 24,புறூடி லேன், ..ச்சேரி கிழக்கு, யாழ்பாணம்.

## வீடு வாடகைக்கு

பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்தி, ஆலடிச்சந்தி இடையில் சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு வாடகைக்குண்டு. [illegible]
தொடர்பு: 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் வையாபுரி

(Retaried Cheif Station Master, K.K.S)



கல்லூரி வீதி, காங்கேசன்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் வையாபுரி 04.12.2006 அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற ஆறுமுகசாமி - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் வசந்தி (U.K.), சுரேஸ்(கிராம உத்தியோகத்தர்), ஆனந்தி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவி (U.K.), ஜெயக்குமார் (டென்மார்க்) ஆகியோரின் மாமனும் ஹரி, ஜோஷ் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.12.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை.சுரேஸ்
(மகன் - கிராம உத்தியோகத்தர், ஐயனார் கோயிலடி ஜே/97, 100).

24, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (55945)

### மயில்வாகனம் தவராஜா (தவம்)

(பாலா என்ஜினியறிங் நிலையத்தின் தற்போதைய உரிமையாளர்)



துணுக்காய், கோட்டை கட்டிய குளத்தினைப் பிறப்பிடமாகவும் தாவளை இயற்றாலையை வசிப்பிடமாகவும் நுணாவில் கிழக்கில் தற்போது வசித்து வருபவருமான மயில்வாகனம் தவராஜா 02.12.2006 அன்று அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் மயில்வாகனம் பரமேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும் குஞ்சுத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் யசோதாவின் பாசமிகு கணவரும் கவிதரனின் தந்தையும் மகேந்திரம், மனோகரன், விமலாதேவி, விஜயகுமார், மேகலாதேவி, பாலகிருஸ்ணன், தர்மசீலினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஈஸ்வரன் (லண்டன்), சுதர்மன், தினேஸ் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.12.2006 செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அன்னாரின் தாவளை இயற்றாலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவளை இயற்றாலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(55977)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ஏழாலை மகா வித்தியாலய
அதிபர்
திரு.செல்லையா ஞானச்சந்திரன்
(SP Trd., S.L.T.S. - 1)

அவர்கள் எமது பாடசாலையின் ஆசிரியராகக் கடமையாற்றி அதிபராக (12.11.2006) பதவி உயர்வு பெற்றமையையிட்டு உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/ஏழாலை மகா வித்தியாலயம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.

# Danish Demining Group, Sri Lanka
## VACANCIES IN JAFFNA

Danish Demining Group (DDG) DDG is an active participant in the global effort to reduce the effects of landmines. DDG currently has vacancies for the following position

**IT Administrator**

Must have skills and experience in problem prevention, -identification and -solution, based on a relevant formal education and some years of practical experience from a similar capacity. He should be fully conversant with installation, configuration, maintenance of internal and external networking, PC's/laptops (running XP and Win2000), office software (mainly Microsoft) and peripheral equipment. Participation in IT selection, procurement and management including supplies/suppliers.

It is absolutely essential that the selected candidate should be willing to travel between locations such as Trinco, Jaffna, Anuradapura and Killinochchi at short notice.

**How to Apply**

Applications with contact details and names of two non related referees should be emailed to jafofficemgr@ddg.lk or posted to 18/10, Wyman Road, Jaffna. Deadline for submitting application is 10th December 2006. Only candidates who meet all the above requirements will be invited for an interview/test.

**The Organization**

The objective ofDDG is to co tribute towards the goals and objectives of the Mine Action Program for Sri Lanka, which aims to reduce the threat of mines and other unexploded ordnance from priority areas. The Demining project in Sri Lanka s scheduled to run upto December 2006 and extended upto 2008 depe ing on funding.

# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**கயிலாசபிள்ளை பறுவதம்**

தோற்றம் 08.03.1926 — மறைவு 05.11.2006

இன்று(05.12.2006)அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

'கமலாம்பிகா பவனம்'
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில் (55958)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 35ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

வையத்தில் 24 . 06 . 1957



தெய்வத்துள் 01 . 11 . 2006

**சண்முகவடிவேலு தெய்வசிகாமணி**

முப்பத்தைந்து நாள்களாயா நீர் பிரிந்து இன்றுடன்
மூன்று முடிச்சிட்ட மனைவி கண்ணீரில் கரைகின்றாள்
முத்தான மூன்று செல்வங்கள் உம் முகம் தேடுகின்றனர்
முன் செய்த தவத்தாலே நீர் முன்னரே சென்றுவிட்டீரே

01.11.2006 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சண்முகவடிவேலு தெய்வசிகாமணி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (05.12.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி மத்தி, நீர்வேலி.

விழிநீர் சொரிந்து நிற்கும்: மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## பூதப்பிள்ளை காசிலிங்கம்

(முன்னாள் சாரதி, இ.போ.ச பருத்தித்துறை யாழ்ப்பாணம்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை காசிலிங்கம் 03.12.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தம்பர் -செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் சிவயோகநாதன்(பிரான்ஸ்), சிறிரங்கநாயகி, சிவயோகநாயகி(ஜேர்மன்)ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌசலா (பிரான்ஸ்),வடிவேல்நாதன்(BOC-யாழ்ப்பாணம்), சிவராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் கல்யாணி (பிரான்ஸ்), சிவலக்சன், சிவலக்சனா, சிவசகானா(ஜேர்மன்) ஆகி யோரின் அன்புப் பேரனுமாவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.12.2006 அன்று நடை பெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
'சுவேந்தினி பவனம்'
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (55959)

தகவல்:
கே.வடிவேல்நாதன்
(மருமகன் BOC,யாழ்ப்பாணம்).

# தேவை

சண்டெல் தொலைபேசி இணைப்புத் தேவை

தொடர்பு: தொ.பே.: 021 4590630

# மணமகள் தேவை

1973ஆம் ஆண்டு பிறந்த உயரம் 5' 1'' அச்சுவினி நட்சத்திரம் 2ஆம் பாதம் பாவம் 4 உள்ள இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தருக்கு படித்த அழகிய பெண் தேவை.

தொடர்பு: சுதா, 222 7825

# சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்**

தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.

தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.

(சி/50463)

# தவறிவிட்டது

இரத்தினம் உதயமலர் என்பவரின் தேசிய அடையாள அட்டையும் (598605097V) இராணுவ அடையாள அட்டையும் வேறு சில முக்கிய ஆவணங்களுடன் 25.11.2006 குஞ்சர் கடைக்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டது. நிரந்தர முகவரி: பலாலி மத்தி, வசாவிளான். தற்காலிகமுகவரி: கரவெட்டி மேற்கு, சண்டில் குளம். நெல்லியடி. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இவ்விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

# தவறிவிட்டது

சுன்னாகம், சூராவத்தையைச் சேர்ந்த செல்வி அன்ரன் மரியநாஸ் கார்த்திகா என்பவரது தேசிய அடையாள அட்டையும் (865903421V),விசேட அடையாள அட்டையும் 02.12.2006 அன்று மதியம் சுன்னாகத்தில் இருந்து பலாலி வீதி வழி கோயில் வீதிக்கு இடையில் சிறிய கைப்பையுடன் (பேர்ஸ்) தவறிவிட்டது. யாராவது கண்டெடுத்தவர்கள் இன்றைய காலகட்டத்தின் நெருக்கடிகளை மனதில் கொண்டு தயவுசெய்து உரியமுகவரியில் அல்லது இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவுமாறு வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

# தவறிவிட்டது.

செல்லத்துரை செல்வராணி (576842428V), செலத்துரை அமிர்தகௌரி(597912906V)ஆகியோரது தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் 30.11.2006 அன்று நல்லூரிலிருந்து யாழ்ப்பாண நகரம்நோக்கி பயணம் செய்கையில் தவறிவிட்டன. அவைகளைக் கண்டெடுத்தவர்கள் யாராவது இருப்பின் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

துஷியந்தன் களஞ்சியம் (கிளிகடை),
முடமாவடி, நல்லூர்.

# ஸ்கந்தா கல்வி நிலையம்

**கலைப்பிரிவுகள் ஆரம்பம்**
**2007, 2008 DAY CLASS**

| | |
|---|---|
| தமிழ் - | திருமதி Y.பங்கயற்செல்வி |
| இந்துநாகரிகம் - | திரு.A.குகதாசன் |
| | திரு.T.தரன் |
| புவியியல் - | திரு.சண்முபராசன் |
| பொருளியல் - | திரு.S.P.குரு |
| அரசியல் - | திரு.S.ஜெயகாந்தன் |
| அளவையியல்- | திரு.R.S.சந்திரன் |
| நாடகமும் அரங்கிய. - | திரு.S.ஞானா |
| GIT | திரு.G.சிறீவரதன் |
| | திரு.A.சுபேசன் |
| General English- | திரு.K.நிஷாந்தன் |

ஆரம்பம் 05.12.2006 பிற்பகல் 3 மணி
(செவ்வாய்க்கிழமை)

தலைமைக்காரியாலயம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

கிளை நிறுவனம்
புதுறோட், காரைநகர்,

இயக்குநர்,
கோ.சிறீவரதன்

# ஸ்கந்தா கல்வி நிலையம்

**எமது ஆசிரியர் குழாம்**

| | |
|---|---|
| கணிதம்- | திரு.S.ஜெயகாந்தன் |
| | திரு .T.நவீந்திரன் |
| விஞ்ஞானம் - | திரு. .A.ஜெகதீஸ்வரன் |
| தமிழ் - | திருமதி Y.பங்கயற்செல்வி |
| | திரு.பா.சற்குணராசா |
| வர்த்தகம்- | திரு.A.சுபேசன் |
| | திரு.வே.உரித்திரசிங்கம் |
| சமூகக்கல்வி - | திரு.R.S.சந்திரன் |
| | திரு.சண்சூபராசன் |
| ஆங்கிலம் - | திரு.K.நிஷாந்தன் |
| | திரு.S.சந்திரமவுலி |
| ICT- | திரு.G.சிறீவரதன் |
| அபிவிருத்தி- | திரு.சண்சூபராசன் |
| சித்திரம் - | திரு.யோ.கேதீசன் |
| | திரு. இ. மதியழகன் |
| சமயம் - | திரு.A.குகதாசன் |

[விசேட பெறுபேறுகளுக்கு இணைந்து கொள்ளுங்கள் ஸ்கந்தாவில்]

தலைமைக்காரியாலயம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

கிளைநிறுவனம், புதுறோட், காரைநகர்.

ஆரம்பம் -
பிரிவு-1 05.12.2006

(55914)

இயக்குனர்
திரு.கோ.சிறீவரதன்.

# விநாயகர் விரதம் இன்று ஆரம்பம்

தென்மராட்சி,டிசெ.5

இன்று ஆலயங்களில் விநாயகர் விரதமும் பிள்ளையார் படிப்பும் இன்றுசெவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறும்.எதிர்வரும் 25 ஆம் திகதி யுடன் விரதம் நிறைவு பெறும்.

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி சண்முகநாதன் நகுலேஸ்வரி
அவர்களின் மாமி
**பூதப்பிள்ளை சின்னம்மா**

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**அந்தோனிப்பிள்ளை சகாயராசா**

தோற்றம் 05.02.1959 — மறைவு 05.12.2002

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறாது எம் நெஞ்சம்
மறையுமா உம் நெஞ்சம்.

(55923)

32, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**சோமசுந்தரம் பரமேஸ்வரி**

தோற்றம் 12.03.1934 — மறைவு 16.11.2005

(திதி நேரமை 05.12.2006)

மண்ணில் மறைந்து விட்ட போதிலும்
நெஞ்சில் எழுதி வைத்த உங்கள் நினைவுகள்
ஆண்டொன்றானாலும் மாறாதம்மா

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

23/1, நாவலடி ஒழுங்கை,
பேச்சியம்மன் கோவிலடி,
வண்.வட.மேற்கு, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 60 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் லயன்
**கதிர்காமத்தம்பி நாகராசா (J.P.)**

(இளைப்பாறிய அதிபர், யா/மகாஜனாக் கல்லூரி, இந்து கலாசார திணைக்களம், சமூக சேவைகள் அமைச்சு யாழ்.மாவட்ட இணைப்பாளர்)

தோற்றம் 29.11.1938 — மறைவு 07.10.2006

குருவிக்கூட்டம் போன்ற எங்கள் வாழ்வதனை
குதறிவிட்டு சென்றதேனோ அரக்கர் கூட்டம்
தர்மம் தலை காக்கும் என்ற உங்கள் வாக்கு
தரணியில் பொய்யாகிப் போனது ஏனோ.

(55904)

8ஆம் கட்டை,
மல்லாகம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சபாபதிப்பிள்ளை செல்லம்மா

காரைநகர், வேம்படியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாபதிப்பிள்ளை செல்லம்மா நேற்று(04.12.2006)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் தவமணிதேவி(கிளி)யின் பாசமிகு தாயும் நாகராசா (பஞ்சன்)வின் அன்பு மாமியும் சுகந்தினி(விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்), நாகரத்தினம்(அளவையியல் விஞ்ஞான பீடம்,சப்பிரகமுவா பல்கலைக்கழகம்), மயூரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.12.2006) முற்பகல் 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.189, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (55957)

தகவல்:
அ.நாகராசா
(மருமகன்).

## திருமதி நாகலிங்கம் வள்ளிப்பிள்ளை



நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் வள்ளிப்பிள்ளை அவர்கள் 02.12.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர் இராசரத்தினம், தியாகராசா (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், பரந்தன் இரசாயன தொழிற்சாலை), இராசலிங்கம்(U.K.) காலஞ்சென்ற யோகம்மா ஆகியோரின் அன்புத் தாயும் ஓய்வுபெற்ற ஆசிரியை யோகேஸ்வரி, தியாகேஸ்வரி, இராஜசுலோசனா (U.K.) ஆகியோரின் அன்பு மாமியும் குகறாஜா (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி), றம்யா (U.K.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்றுமுன்தினம் (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (55945)

தகவல்:
நா.இராசரத்தினம் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## கட்டியம் கூறும் 'கைங்கரியம்'!

இனப்பிரச்சினை விவகாரத்தில், சமாதானத்திற்கான கதவை இறுக்கிப் பூட்டிவிடுவதற்கு அரசாங்கம் தன்னாலான சகல முயற்சிகளையும் மிக வேகமாக மேற்கொண்டு வருகிறது. அது விடயத்தில் அரசிடம் வேகம் மட்டுமின்றி தீவிரமும் அளவு மீறிய ஆவேசமும் காணப்படுகின்றன.

சமாதானப் பேச்சுகளின் அனுசரணையாளரான நோர்வேயின் விசேட பிரதிநிதி ஹன்சன் போவரின் உத்தேச கிளிநொச்சி விஜயத்தைத் தடுத்து வைத்திருக்கின்றது அரசு.

அனுசரணைப் பணிக்கு நோர்வேயை அழைத்தது அரசுதான். விடுதலைப்புலிகள் அல்லர்; உண்மையே.

அந்த அதிகாரத்தனத்துடன், இறுமாப்புடன் அனுசரணையாளர் விடயத்தில் அரசாங்கம் தலையிட்டிருக்கின்றது. இது எந்த வகையிலும், என்ன காரணம் கொண்டும் ஏற்புடையதல்ல.

அரசுக்கு விருப்பமானால் மட்டும் வருவதற்கும் போ என்றால் போவதற்கும் அனுசரணையாளரைக் கிள்ளுக் கீரையாகக் கருதிச் செயற்படுவதும், அவர்கள் மீது சட்டாம்பிள்ளைத் தனத்தைக் காட்டுவதும் மிகவும் வெறுக்கத்தக்கது; அநாகரிகமானது.

முடிவில்லாமல் நீண்டு சென்றுகொண்டிருந்த போரை நிறுத்தி, இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு உதவவேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே, மதிப்பார்ந்த அனுசரணைப் பணியை நோர்வே ஏற்றுக்கொண்டது. அதற்கான சுயநலமான காரணங்கள் இருக்கலாம்; இல்லாது விடலாம். அது வேறு விடயம்-

அனுசரணைப் பணியின் பெறுமதியை சற்றும் உணராமல், ராஜதந்திர ரீதியான உரிய மதிப்பளிக்காமல், சமாதானத் தூதுவர் போவரை கிளிநொச்சிக்குச் செல்லவிடாமல் தடுத்ததை அரசு எந்த வகையில் நியாயப்படுத்தப் போகின்றது?

போவர், தாம் திட்டமிட்ட நாளில், கிளிநொச்சிக்குச் சென்றால் அவருக்கு உயிராபத்து வந்துவிடும் எனக் கருதியா, அரசு அவ்வாறு நடந்துகொண்டது? விடுதலைப் புலிகள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுப்பதற்கும் போவரின் கிளிநொச்சி விஜயத்திற்கும் என்ன தொடர்பு?

நூலிழையில் அசைந்து கொண்டிருக்கும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை தக்க வைக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்காகவே சமாதானத் தூதுவர் இந்த நாட்டுக்கு வந்தார். அது அவரின் கடமை; அனுசரணையாளர் என்ற வகையிலான பொறுப்பு.

தன்னுடன் தொங்கிக்கொண்டிருக்கும் இனவாத கடுங்கோட்பாட்டாளர்கள் விரும்புவது போன்று, நோர்வேயை அனுசரணைப் பணியில் இருந்து நீக்க வேண்டும், துரத்திவிட வேண்டும் என்று அரசு விரும்பினால், அதனை வெளிப்படையாகச் சொல்வது தானே.

நாட்டின் சகல இன மக்களினதும் எதிர்பார்ப்புக்கு ஆளான சமாதானப் பேச்சை நல்லடக்கம் செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்வதற்கும்-

சமாதானத் தூதுவர் அதற்கு முன்னதாக விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்கும் என்ன சம்பந்தம்; ஏது தொடர்பு? விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்று நேரில் சென்று அறிவதற்கு அனுசரணையாளரான அவருக்கு உரிமை இல்லையா?

சமாதானப் பேச்சுக்களை முடித்துக்கொள்வதற்காக விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதாகவோ அல்லது பயங்கரவாதச் தடைச் சட்டத்தை மீண்டும் அமுலுக்கு கொண்டு வருவதாகவோ அரசாங்கம் நாளை புதன்கிழமை நிச்சயமாகவே முடிவு எடுக்குமாயினும் கூட, அதற்கு முதல் போவர் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவதால் குந்தகம் எதுவும் ஏற்பட்டு விடாதே! தீர்மானிக்கப் போவது இலங்கை அரசாங்கம் தானே; நோர்வேயோ அல்லது போவரோ அல்லவே!

ஹன்சன் போவரை கிளிநொச்சி செல்லாது தடுப்பதற்கு தர்க்கரீதியான காரணம் தான் எதுவும் அரசிடம் உண்டா?

நோர்வேயை - அதன் விசேட தூதுவரை - இவ்வாறு அவமரியாதையாக நடத்தினால், அனுசரணைப்பணியிலிருந்து அது தானாகவே விலகிவிடும். அப்போது அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தீவிரவாத சக்திகளையும் போர் விரும்பிகளான தென்னிலங்கையின் எண்ணிக்கையில் குறைந்த சிறிய கூட்டத்தினரையும் சாந்தப்படுத்திக்கொள்ளலாம் என்று அரசாங்கம் கருதியதா?

நோர்வேயை அதனது பணியிலிருந்து வெளியேற்றி, போர் வெறியைத் தனித்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் உள்ளூர நினைத்தால், நோர்வேயின் பணி தேவையில்லை என்று வெளிப்படையாகக் கூறி விடை கொடுக்கலாமே!

நாட்டில் மீண்டும் போரை நடத்தி, மக்களையும் அதனையும் குட்டிச்சுவராக்குவதற்கு கங்கணம் கட்டிக்கொண்டுவிட்ட அரசை, நோர்வேயினால் தடுக்க முடியுமா என்ன? ஒவ்வொருவரும் தத்தமது விதியை அல்லது வினையை தாமே தமக்குள் விதைக்கிறார்கள். வெளியார் அல்லர்!

அரசு தனது விதியை தானே நிர்ணயித்துக்கொள்ளலாம். நன்னோக்கத்துடன் உதவ வந்த நோர்வேயினதோ அல்லது வேறு தரப்புகளினதோ விதிகளை அல்ல.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுக்கள் ஊடாகவே தீர்வு காணப்படும். போரின் மூலம் அல்ல என்ற " மஹிந்த சிந்தனை"யுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி -

இப்போது யுத்தத்தின் மூலம் தீர்வுகாண உத்தேசித்துவிட்டார் என்பதற்கு கட்டியம் கூறி நிற்கிறது, சமாதானத் தூதுவர் போவரின் கிளிநொச்சி விஜயத்தை தடுத்து நிறுத்திய பெரும் "கைங்கரியம்"!

# குடாக்கடலில் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் மீன்பிடிப்பதற்கு மீனவர்களுக்கு அனுமதி

குருநகர், டிசெ.5

யாழ்.குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கான அனுமதி நேற்றுத் தொடக்கம் படையினரால் வழங்கப்பட்டுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் மட்டும் மீன்பிடிக்கலாம்.

குருநகர் கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் இணையத்தினர் குருநகர் இறங்குதுறைப் படை அதிகாரியுடன் நடத்திய கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த அனுமதி மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த அனுமதியைத் தொடர்ந்து நேற்று குருநகரைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் நூறு பேர் 25 வள்ளங்களில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். நேற்றுக்காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட கடற்பரப்பில் தொழில் செய்து மீனவர்கள் கரை திரும்பினர். நாளாந்தம் 25 வள்ளங்களில் தலா 4 மீனவர்கள் வீதம் 100 பேருக்கு மட்டுமே இச்சுழற்சிமுறை அனுமதி படையினரால் வழங்கப்பட்டுள்ளது எனவும் -

கரையிலிருந்து ஒரு கிலோமீற்றர் வரை காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை மட்டும் தொழில் செய்யமுடியும் எனவும் குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்களின் இணையம் தெரிவித்தது.

இதேநேரத்தில் நாளை 6ஆம் திகதி புதன்கிழமை குருநகரைச் சேர்ந்த ஐந்து இழுவைப்படகுத் தொழிலாளர்கள் குடாக்கடலில் தொழில்செய்வதற்கான அனுமதியும் படையினரால் வழங்கப்பட்டுள்ளது எனவும் -

அவர்கள் நாளை பிற்பகல் 2 மணிக்குத் தொழிலுக்குச் சென்று மறுநாள் 7ஆம் திகதி காலை 9 மணிக்கு கரைக்குத் திரும்பலாம் எனவும் - சங்கங்கள் தெரிவித்தன.

நேற்று மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் தமது வள்ளங்களை மரக்கோல் மூலம் தாங்கியும் பாய்கள் மூலமுமே தொழில்செய்ய அனுமதிக்கப்பட்டனர் எனவும் குறிப்பிடப்பட்ட கடல் எல்லையை மீனவர்கள் தாண்டிச்செல்லாமல் இருக்க கடற்பரப்பில் கடற்படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர் எனவும் நேற்று மீன்பிடித்து கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் நேற்றுத்தான் குடாக்கடலில் மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**மீன் விலை இறங்கவில்லை**

குடாக்கடலில் குருநகர் மீனவர்கள் பிடித்து வந்த மீன்களை சின்னக்கடைப் பொதுச்சந்தையில் சந்தைப்படுத்திய போதிலும், மீனின் விலைகளில் எதுவித மாற்றமும் இல்லாமல் வழமை போல உயர்வாகவே காணப்பட்டதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

சூடைமீன் கிலோ 280 ரூபா ஆகவும் ஏனைய மீன்வகைகள் கிலோ 600 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (1-51)

# அம்பாறை - சங்கமான்கந்தவில் அதிரடிப்படை - புலிகள் மோதல்!

கொழும்பு, டிசெ.5

அம்பாறை - சங்கமான்கந்த பகுதியில் விசேட அதிரடிப்படை அணி ஒன்றுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்றுக் காலை மோதல் இடம்பெற்றிருக்கிறது.

காலை 8.45 மணி முதல் இடம்பெற்ற மோதலில் ஆறு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களைக் கொன்றதுடன், புலிகள் கடத்திச் சென்றிருந்த உழவு இயந்திரங்கள் மூன்றை அதிரப்படையினர் கைப்பற்றினர் எனவும் தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்த மோதலில் காயமடைந்த அதிரடிப்படையினர் நால்வர் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் ஊடக நிலையம் தெரிவித்தது.

இதேவேளை -

இந்த மோதலில் அதிரடிப்படையினர் நால்வர் உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

கஞ்சிகுடிச்சாறு பிரதேசம் நோக்கி நேற்றுக் காலை காஞ்சிரங்குடா, தாண்டியடி விசேட அதிரடிப் படையினர் பாரிய அளவிலான முன்னேற்ற முயற்சியினை மேற்கொண்டனர் என்றும் -

எறிகணைத்தாக்குதலுடன் முன்னேற முற்பட்ட விசேட அதிரப்படையினரின் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்தினர் எனவும்,

இத்தாக்குதலில் விசேட அதிரப்படையினர் தரப்பில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். எட்டுப் பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று முதற் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும் விசேட அதிரடிப்படையினருக்கு ஏற்பட்ட இழப்புகள் இன்னும் அதிகம் என்று களமுனைப் போராளிகள் தெரிவிக்கின்றனர் எனவும் - விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவித் தன.

இத்தாக்குதலையடுத்து படை நிலைகளில் இருந்து அம்பாறை நகர் நோக்கிப் படையினரின் நோயாளர் காவு வண்டிகள் (அம்புலன்ஸ்) பல தடவைகள் சென்று வந்ததை அவதானிக்க முடிந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

## குடாநாட்டில் 3 இடங்களில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, டிசெ.5

யாழ். குடாநாட்டில் பெரியவிளான், கல்வியங்காடு மற்றும் சிறுப்பிட்டி பகுதிகளில் நேற்றுப் படையினரால் பெருமளவிலான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 6.50 மணியளவில் பெரியவிளான் பகுதியில் துப்பாக்கி ரவைகள்-5001, கைக்குண்டு கள்-05, தொலைத் தொடர்புக் கருவி-01, அன்ரனா-01, றிமோட் கொண்றோல் கருவி-01, கைத்துப்பாக்கி-01, அதற்கான ரவைக் கூடு-01 மற்றும் வயர்ச் சுருள்-01 போன்ற ஆயுதப் பொருள்களும் -

நேற்றுக் காலை 7.45 மணியளவில் கல்வியங்காட்டுப் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது ரி-56 ரக துப்பாக்கி-01, அதற்கான மகஸின்-01, துப்பாக்கி ரவைகள்-100 மற்றும் டெட்டனேற்றர் குச்சிகள் போன்ற ஆயுதப் பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

நேற்றுக் காலை 10.20 மணியளவில் சிறுப்பிட்டிப் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு தேடுதலின்போது ரி-56 ரக துப்பாக்கி-01, மகஸின்-01, துப்பாக்கி ரவைகள் -80, தொலைத்தொடர்புக் கருவி-01, அன்ரனா செற்-01, 10 கிலோகிராம் நிறையுடைய கிளைமோர் குண்டு-01 மற்றும் கைக்குண்டுகள்-04 என்பன கைப்பற்றப்பட்டன எனவும் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ-03)

## சுகாதாரக் குழுக் கூட்டம் நாளை

குருநகர், டிசெ.5

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்திய நிறுவனத் தலைவர்களுக்கான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (1-51)

## சித்திரபாட கருத்தரங்கு

கோப்பாய், டிசெ.5

ஜி.சீ.ஈ.(சாதாரண) தர மாணவர்களுக்கான சித்திரபாட முன்னோடிக் கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறவுள் ளது.

ஆர்வமுள்ள சகல மாணவர்களையும் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-202-72)

## ஊடக வள நிலையத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.5

யாழ்.பல்கலைக்கழகத்தின் முழுநேர இதழியல் கற்கைநெறி மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது என பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவித்தார். (1-202-115)

## குமுதினிப் படகில் வருவோர் மீன், கருவாடு எடுத்துவரத் தடை!

நல்லூர், டிசெ.5

நெடுந்தீவு போக்குவரத்துச் சேவையில் உள்ள குமுதினி படகுப் பயணிகள் தம்முடன் மீன், கருவாடு போன்ற பொருள்களை எடுத்து வருவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

குமுதினி படகில் பொருள்களை எடுத்துச்செல்வதற்குத் தடை விதித்த படையினர் நேற்றுத் தமது சொந்தப் பாவனைக்கென ஒரு கிலோ அவித்து எடுத்துவரப்பட்ட மீன் உட்பட இரண்டு கிலோவுக்குக் குறைவான எடையுள்ள மீன்களைக் கூட எடுத்துச்செல்ல அனுமதிக்காமையினால் தமது பாவனைக்கென மீன் மற்றும் கருவாடுகளைக் கொண்டுவந்தவர்கள் துறைமுகத்தில் நின்றவர்களிடம் அவற்றைக் கொடுத்துவிட்டு வெறுங்கையுடன் யாழ்.நகர் வந்துசேர்ந்தனர். (111)

### நாளை

கார்த்திகை 20
புதன்கிழமை
06.12.2006
திதி : துதியை
பின்னிரவு: 04.40
நட்சத்திரம் : மிருகசீரிடம்
பிற்பகல் : 02.32
சுபநேரம் : 04.47 - 06.17
ராகுகாலம் : 12.17 - 01.47

## பொருள்கள் வாங்க வரிசையில் நிற்போரின் சைக்கிள்களை அபேஸ் செய்யும் திருடர்

நல்லூர், டிசெ.5

உணவுப்பொருள்களைப் பெறுவதற்காக அதிகாலை முதலே விற்பனை நிலையங்களின் முன் கூடும் மக்கள் தமது சைக்கிள்களைப் பறிகொடுக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

சைக்கிள்களில் வருபவர்கள் கடைகளின் முன்பாக வண்டிகளை நிறுத்த முடியாத நிலையில் கடைகளுக்குச் சிறிது தூரம் தள்ளியே நிறுத்துகின்றனர்.

நம்பர்களை வாங்குவதிலும் பொருள்களைப் பெறுவதிலும் மக்கள் அக்கறை செலுத்திக்கொண்டிருக்கும் சமயம் பூட்டியுள்ள சைக்கிள்களைக் கூட மாற்றுத் திறப்புப் போட்டு திருடர்கள் அபகரித்துச் சென்றுவிடுகின்றனர்.

கடந்த வாரத்தில் மட்டும் நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடி மற்றும் யாழ்.கிளை இல. 12 ஆகிய ப.நோ.கூ. ச கடைகள் அருகில் ஆறு சைக்கிள்வண்டிகள் களவு போயுள்ளதாகக் கூறப்படுகின்றது. (111)

## குடாநாட்டுப் பார்சல்கள் மட்டுமே யாழ்.தபாலகத்தில் ஏற்கப்படும்

நல்லூர், டிசெ.5

குடாநாட்டுக்குள் அனுப்பப்படும் பார்சல்கள் மட்டுமே யாழ்.தபாலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தபால் வட்டாரம் தெரிவித்தது.

ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் பார்சல்கள் ஏற்றுக்கொள்ளப்படாது என்றும் -

குண்டூசி, ஸ்ரெப்ளர் கிளிப் போன்றவற்றால் இணைத்துக் கடிதங்கள் அனுப்புவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் -

பொதுமக்களுக்கு தபாலக வட்டாரம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (202-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி புலிகளைத் தவறாக வழிநடத்தினார்

## புதுடில்லியில் வைகோ. குற்றச்சாட்டு



புதுடில்லி,டிசெ.5

இலங்கையில் சமாதானத்தை உருவாக்கும் தமது பணியில், அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி விடுதலைப் புலிகள் இயக்கத்தைதவறான பாதையில் வழிநடத்தினார்.

இவ்வாறு கூறியுள்ளார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் வைகோ.


புதுடில்லி வந்துள்ள வைகோ. அங்குள்ள செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி தவறிழைத்தார் என்பதனை நான்உறுதியாகக்கூறுகிறேன். அதனை நான் மாற்றுவதற்கில்லை.

1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னர், பிரதமர் ராஜீவ் காந்தி வேண்டுமென்றே விடுதலைப் புலிகளைத் தவறாக வழிநடத்தினார். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை - என்றும் வை.கோ கூறினார்.

**சோனியாவின் பார்வை வித்தியாசமானது**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் குறித்த ராஜீவின் பார்வைக்கும் அவரது மனைவி சோனியாவுக்கும் இடையில் அடிப்படை ரீதியான பெரும் வேறுபாடு உண்டு - எனவும் அவர் சொன்னார். (அ)



இலங்கை வந்துள்ள நோர்வே விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் போவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை நேற்று திங்கட்கிழமை கொழும்பில் சந்தித்து உரையாடியபோது எடுக்கப்பட்ட படம்.

## புலிகளைத் தடை செய்யும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகம் சட்டத்தரணி நிசாம் காரியப்பர், தேசிய கொள்கைப் பரப்புச் செயலாளர் ஏ.எம்.எம். நௌசாத், சர்வதேச விவ காரங்களுக்கான ஆலோசகர் சட்டத்தரணி ஏ.எம்.பாயிஸ் ஆகியோரும் கலந்துகொண் டனர்.

அவர்மேலும்தெரி வித்திருப்பதாவது :-

அண்மையில் நடைபெற்ற தாக்குதல்களின் பின்னணியில் இலங்கை அரசு புலிகளின்செயற்பாடுகள் சம்பந்தமாகக் கொண்டுள்ள கடுமையான நிலைப்பாடுகள் - சமாதானப் பேச்சுகளுக்கு உறுதுணையாக கிளிநொச்சிக்கு போவதற்கு எத்தனிக்கின்ற நோர்வே விசேட சமாதான தூதுவரின் பயணம் தடுக்கப்பட்டுள்ளமை குறித்த சந்தேகங்கள் என்பன தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அவதானித்து வருகிறது. எவ் வாறான ஆத்திரமூட்டும் செயற்பாடுகள் நடைபெற்றாலும் கூட அரசு இயன்றவரை பொறுமைகாக்க வேண்டும் என்றே மு.கா. விரும்புகிறது.

அத்துடன், சர்வதேச சமூகத்தின் அனுசரணையோடு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பேச்சுகளை முழுமையாக நம்பியிருக்கின்ற பொதுமக்கள், ஓரளவுக்கு சர்வதேச சமூகத்தை அனுசரித்து இவ்வாறான முடிவுகளைஎடுப்பது சாலச்சிறந்தது என்று அபிப்பிராயம் கொண்டிக்கின்றனர் எனவும் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டினார்.

கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற பாதுகாப்பு சூழல் சம்பந்தமாகவும் இன்று நாட்டிலுள்ள அரசியல் களநிலவரத்தில் புதிதாக ஏற்படக்கூடிய மாற்றங்கள் சம்பந்தமாகவும் குறிப்பாக சர்வ கட்சி மகாநாட்டில் பிரதான எதிர்க்கட்சியும் பங்குபற்றுகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு தீர்வுப்பொதி சம்பந்தமான இணக்கப்பாடு ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கிறதா? என்பது குறித்த விடயம் சம்பந்தமாகவும் நோர்வே விசேட சமாதான தூதுவர் ஜோன் ஹன்சன் போவர், ரவூப் ஹக்கீமிடம் கேட்டறிந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## போர்நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வேயை அவர்களது பணியை ஓரிரு நாள்கள் இடைநிறுத்துமாறு கேட்டிருப்பதால் எமது பணிகள் நிறுத்தப்படமாட்டா.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாட்டில் எந்தவிதமாற்றமும் இல்லை. சமாதான முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர்களும் கண்காணிப்புக் குழுவினரும் வெவ்வேறுவகைகளைச் சார்ந்த கடமைகளை கொண்டுள்ளனர்.

எமது நடவடிக்கைகளை இடைநிறுத்த வேண்டுமானால் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யப்படவேண்டும். அரசியல் நடவடிக்கைகள் எமது பணி களில் எந்தவிதமாற்றத்தையும் கொண்டு வரமாட்டா.

போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பான செயற்பாடுகள் குறித்த விளக்கங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மூலம் கடந்த வாரம் பெற்றுள்ளோம். இப்படி கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## ஓமந்தையில் மோதல்!

வவுனியா,டிசெ.5

வவுனியா ஓமந்தைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் படையினர் மேற்கொண்ட நகர்வு முயற்சியைத் தாங்கள் முறியடித்திருக்கின்றனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

ஓமந்தை ஊடான பயணிகள் போக்குவரத்தை நேற்று பிற்பகலுடன் இடைநிறுத்திய இராணுவத்தினர் அதன் பின்னர் இந்த முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டனர் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-12)

## புலிகளைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெல உறுமய ஆகியன அரசுக்கு அழுத்தம் கொடுத்துவரும் நிலையில் இச்சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

சமாதான முயற்சிகளுக்கும், நாட்டின் எதிர்காலத்துக்கும் போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையே அடிப்படை. இதனையே தனது இந்திய விஜயத்தின் போது ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தி இருந்தார்.

இந்தக் கட்டத்தில் அவசரப்பட்டு புலிகளைத் தடை செய்தால் உடன்படிக்கை முற்றாகச் செயலிழந்து விடும். சமாதான முயற்சிகளும் அடியோடு புரண்டு விடும் என்று ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியி டம் நேரில் வலியுறுத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-02)

## புலிகள் அமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள அரசு என்ற வகையில் இது குறித்துத் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டியுள்ளது.

"இதேவேளை, இந்தியா, கனடா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும் புலிகளைத் தடை செய்துள்ளன. அவுஸ்திரேலியா, புலிகளைத் தடை செய்வது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. மேலும், பல நாடுகளும்

இது குறித்து ஆராய்வதாகத் தெரிய வருகிறது. இந்த நிலையில் இலங்கை அரசு, புலிகளைத் தடை செய்ய வேண்டுமென உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது."

- என்று அமைச்சர் ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியில் கடந்த வெள்ளியன்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து அரசு, புலிகள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராகி வருகின்றது. நோர்வேயின் விசேட தூதர் ஜோன் ஹன்ஸன் போவரின் கிளிநொச்சி விஜயத்தைக் கூட அரசு தடுத்து நிறுத்தியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பாக அரசு சில முடிவுகளை எடுத்த பிறகே நோர்வேத் தூதர் வன்னிக்குச் செல்வதை அரசு அனுமதிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் அமு லுக்குக் கொண்டு வருவது, விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வது அல்லது தடைக்கு ஒப்பான கட்டுப்பாடுகளை அந்த இயக்கம் மீது விதிப்பது போன்ற முக்கிய முடிவுகளையே அரசு அடுத்த சில தினங்களில் நாட்டு மக்களுக்கு அறிவிக்க உள்ளது என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித் தன.

நாளை புதன்கிழமை நடைபெறவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு பின்னர் அரசு முடிவுகள் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## கடமைக்குச் சமூகமளிக்க ரெலிகொம் அழைப்பு

கொழும்பு,டிசெ.5

ரெலிகொம் நிறுவனப் பணியாளர்கள் சகலரையும் இன்று செவ்வாய்க்கிழமை கடமைக்குச் சமூகமளிக்குமாறு, அந்த நிறுவனம் கேட்டுள்ளது.

ஸ்ரீலங்கா ரெலிகொம் அலுவலகங்கள் இன்றும் திறந்திருக்கும் என்றும் வழமையான பணிகள் நடைபெறும் என்றும் அந்த நிறுவனம் அறிவித்திருக்கிறது.

ரெலிகொம் கூட்டுத் தொழிற்சங்க சம்மேளனம் நாடளாவிய ரீதியில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் வேலை நிறுத்த அழைப்பு விடுத்திருந்தது.

ரெலிக்கொம் நிறுவனத்தில் அரசியல் நியமனங்களே அதிகமாக நடைபெறுவதாகவும், நியமனங்களுக்கோ பதவி உயர்வுகளுக்கோ உரியதிட்டம் எதுவும் இல்லை என்று சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது. (அ)

## கொழும்பு மாநகர முன்னாள் மேயர் கணேசலிங்கம் காலமானார்

கொழும்பு, டிசெ.5

கொழும்பு மாநகரசபையின் முன்னாள் முதல்வர் கே.கணேசலிங்கம் நேற்று கொழும்பில் காலமானார். கொழும்பு மாநகரசபையின் உறுப்பினராகவும் பிரதிமேயராகவும், மேயராகவும் இருந்தவர் கே.கணேசலிங்கம். கடந்த சில நாள்களாக உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த இவர் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்தார். இவரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் எவையும் அறிவிக்கப்படவில்லை. (த-12)

## பீஜித்தீவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க அரசு கடந்த சில வாரங்களுக்கு முன்னர் திட்டமிட்டிருந்ததைத் தொடர்ந்து, அந்த நாட்டின் இராணுவத் தளபதி அரசைக் கவிழ்க்கப்போவதாக தொடர்ந்து எச்சரித்து வந்தார்.

இந்நிலையில் நேற்று பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் எதுவித மோதல்களும் இடம்பெறாமலேயே பீஜி இராணுவம், நாட்டின் அதிகாரத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது. கடந்த 20 வருடங்களில் அந்த நாட்டில் இடம்பெற்ற நான்காவது ஆட்சிக்கவிழ்ப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கதாகும். (த-12)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு சமாதானத்தை நிலைநாட்ட முன்வர வேண்டும்.

இந்தப் பிரச்சினையில் தலையிட்டு ஒரு சுமுகமான தீர்வைக் கண்டறிவதற்கு இந்திய அரசு மறுத்து, ஒதுங்கி இருப்பது ஏன் என்பது எனக்கு விளங்கவில்லை.

இந்தியாவின் தலையீட்டை எதிர்பார்த்துக்கொண்டு இலங்கை அரசும் இருக்கிறது. விடுதலைப் புலிகளும் இருக்கிறார்கள். எனவே, இந்தியா தலையிட்டு தீர்வுக்கான தனது பங்களிப்பைப் பெரிதாகச் செய்யவேண்டும்.

**இலங்கைத் தமிழர்களுக்கு உதவ இந்தியா ஏன் இன்னும் முன்வரவில்லை?**

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நடந்த கார்கில் யுத்தத்தில் 2,000 இந்தியப் படையினரின் மரணத்துக்கு அன்று பொறுப்பாக இருந்த பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்புக்கு இன்று செங்கம்பளம் விரித்து இந்திய அரசு வரவேற்புக் கொடுக்கிறது. இந்த நிலையில் இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு அமைதியை நிலைநாட்டுவதற்கு இந்தியா ஏன் தயங்க வேண்டும்?

ஆப்கானிஸ்தானுக்கு இந்தியா பெருந்தொகை நிதி உதவிகளைச் செய்துள்ளது. இந்தியன் ஒருவன் அங்கு சிரச்சேதம் செய்யப்பட்டிருந்தாலும் இந்தியா உதவுகிறது. பூகம்பத்தால் சேதமடைந்த பகுதிகளைக் கட்டியெழுப்பப் பாகிஸ்தானுக்கு 18[illegible] கோடி ரூபாவை இந்தியா வழங்கியிருக்கிறது. இது போன்ற உதவிகளை இலங்கையில் அவதிப்படும் தமிழ் மக்களுக்கு இந்தியா ஏன் இன்னமும் வழங்க முன்வரவில்லை?

இலங்கையில் அல்லல்படும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு இந்திய அரசு உடனடியாகத் தலையிட்டு உதவ வேண்டும்."

- இவ்வாறு சுவாமி ஸ்ரீஸ்ரீ ரவி சங்கர் கூறினார்.(ஐ)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
திருவருட்செல்வி பொன்னுத்துரை
(2ஆம் வட்டாரம், நயினாதீவு)

| ஜனனம் | மரணம் |
|---|---|
| 24.10.1945 | 12.12.2000 |

திதி: கார்த்திகை கரைதேய் பிரதமை (05.12.2006)

ஆண்டுகள் ஆறு கடந்தது - அம்மா - உம்
துயரம் ஆறிடுமோ! ஆறாய் உம் நினைவு பெருகுது - அம்மா!
நாம் தாயை இழந்த சேய்களாய் ஏங்கித் தவிக்கின்றோம்! - அம்மாவே
ஆண்டவன் திருவடியில் நினைவுத்தீபம் ஏற்றிவைப்போம்!

தகவல்:
ஸ்ரீபாலன் (ஆசிரியர்-மகன்)
இல.44/16, மணல்தறை வீதி,
கந்தர்மடம்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்
(நயினாதீவு)

G.C.E. O/L
க.பொ.த. சாதாரணம் - 2006
மேல்மாகாண கல்வித் திணைக்கள வினாத்தாள்கள்
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்

கல்விச் சேவையில் 30ஆவது ஆண்டு கால்பதிக்கும் உங்கள் நிறுவனம்
கல்வியாண்டு 2007
புதிய வகுப்புகள் ஆரம்பம்
09.12.2006 - 12 a.m.
தரம் 6,7,8,9,10, O/L வரை
யாழ். நகரில் பிரபல்யமான ஆசிரியர் குழாமின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பமாகின்றன.
இன்றுமுதல் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

C.C.A
சுன்னாகம்
A/L Day
பிரிவு II
Acc-M.சசிரூபன்
Eco.S.சிறீ
B/Stu.M.முரளி
ஆரம்பம்:-
06.12.2006 10 a.m.

கற்க கசடற!
ஐடியல் அக்கடமி
சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் | இணுப்பிட்டி காரைநகர் | நீராவியடி யாழ்ப்பாணம்
தரம் 3 முதல் A/L வரை
கல்வியாண்டு 2007
மூன்று இடங்களிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் ஆரம்பம்:- 05.12.2006
செவ்வாய் 3.30 p.m.
நிர்வாகியும் கணித ஆசானும் V.N. பத்மநாதன்

A/L கணக்கீடு
திரு.தேவா
A/L 08-சனி, ஞாயிறு (p.m.)
A/L 07 - செவ், வியா.(p.m.)
Day திங்.-வெள்.,(a.m.)
தனிப்பாட அனுமதி உண்டு
யூனிவேர்சல்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org